## இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவகம் - 2015

இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களது பயன்படு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 163,024,641 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியபோதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப்பிடப்பட்ட தவறுகள் 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிறுவகமானது ரூபா 2,822,373 பெறுமதியான நூலகப் புத்தகங்களையும் வார சஞ்சிகைகளையும் தேய்மானத்திற்குள்ளாக்குவது தொடர்பான கொள்கையினை அறிமுகப்படுத்தி தேய்மானத்தை மேற்கொள்ளவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தப்போவ மாதிரி விவசாயப் பண்ணை அமைந்துள்ள 05 ஏக்கர் காணியினது பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) வெளிநாட்டு மானியமாகப் பெறப்பட்ட ரூபா 6,616,827 தொகையில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களுக்குரிய காலக்கழிவு சீராக்கல் செய்யப்பட்டிருக்கவுமில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி மீதியைக் குறித்த பதிவேட்டுடன் கணக்கிணக்கஞ் செய்தபோது ரூபா 417,428 வேறுபாடு நிலவியது.

### 2.2.4 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 554,737 ஆகும். அக் கடன் மீதியை அறவிடுவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 14 நிறுவனங்களிலிருந்து அநேக ஆண்டுகளாக நிலவி வரும் பெற வேண்டிய பாதுகாப்பு வைப்பு மீதியான ரூபா 245,650 இனை அறவிடுவதற்கு நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அவற்றிற்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை.

| | விடயம் | பெறுமதி | வழங்கப்படாத ஆவணச் சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | பாதுகாப்பு வைப்பு | 187,827 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (ஆ) | கடன்பட்டோர் | 11,783,524 | |
| (இ) | கடன்கொடுத்தோர் | 5,406,344 | |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டின்போது ரூபா 2,822,373 கூட்டுத்தொகையுடைய நூலகப் புத்தகங்களினதும் வார சஞ்சிகைகளினதும் வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 45,519,601 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 70,181,702 ஆவதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மிகை ரூபா 24,662,101 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினது சம்பளம், வேதனம், ஊழியர் நலன்களுக்கான செலவினம் என்பன ரூபா 32,935,808 இனால் அதிகரித்தமை, ஆராய்ச்சி நிலையச் செலவினத்தின் ரூபா 6,956,799 அதிகரிப்பு மற்றும் ஏனைய வருமானத்தில் ரூபா 14,546,456 குறைவு ஆகியன மிகை குறைவடைந்தமைக்கு பிரதான காரணிகளாகும்.

முன்னைய பல ஆண்டுகளது நிதி விளைவுகளைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2011 ஆம் ஆண்டின் போதான ரூபா 7,998,680 பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 59,537,758 பற்றாக்குறையாக அதிகரித்திருந்தது. பின்னர் அது கிரமமாக இலாபமீட்டும் நிலையை அடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரசிற்குச் செலுத்தப்பட்ட வரி மற்றும் நிலையான சொத்துக்களுக்கான தேய்மானம் சீராக்கலுக்கு உள்ளாகியதன் பின்னரான நிறுவனத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 116,578,448 ஆகியதுடன் அது படிப்படியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 256,602,876 பங்களிப்பாக உருமாறியிருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்ட ரீதியான நிகழ்வுகள்

நிறுவகத்தால் வெளி நிறுவனங்கள் மற்றும் 09 நபர்களுக்கு எதிராக ரூபா 16,716,899 கூட்டுத் தொகையுடைய இழப்பீடு கோரி 09 நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. வெளி நபர் ஒருவர் நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தொடுத்திருந்தார்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் பணிகள் பின்வருமாறு.

- தென்னை மரங்களின் வளர்ச்சி மற்றும் தெங்குப் பயிர்ச் செய்கை, தென்னங் காணிகளில் வேறு பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளல் மற்றும் விலங்கினக் கட்டுப்பாட்டில் ஈடுபடுதல் சம்பந்தமாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நோய்களுக்கும் கிருமிகளுக்கும் நிவாரணங்களை மேற்கொள்ளுதலும் சிகிச்சை அளித்தலும்.

- ஆராய்ச்சி நிறுவனம். மேற்பார்வை நிலையங்களையும் நாற்றுப் பண்ணைகளையும் நிறுவுதல், பேணுதல், தெங்கு உற்பத்தியைத் தயார்படுத்தல், உபயோகித்தல் சம்பந்தமாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல், இயந்திரங்களை நிறுவுதல், பேணுதல் மற்றும் மேற்பார்வை உபகரணங்களை நிர்மாணித்தல் என்பன.

- தெங்குத் தொழிலுக்கு அனுசரணையான ஆலோசனை மற்றும் விரிவாக்கல் ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் தெங்குத் தொழில் தொடர்பாக கைப்பணிப் பாணியிலான சகல தெங்குத் தொழில் தொடர்பாகவும் கைப்பணிப் பாணியிலான சகல விடயங்கள் சம்பந்தமாகவும் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) தேங்காயின் உற்பத்தி

2015 ஆம் அண்டில் 04 வள நிலையங்களும், 06 ஆராய்ச்சி நிலையங்களும், மாதிரி விவசாயப் பண்ணையும் தென்னை ஆராய்ச்சிச் சபையால் பேணப்பட்டவாறிருந்தது. அத் தோட்டங்களினது தேங்காயின் உற்பத்தி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| விளைச்சல் வள/ ஆராய்ச்சி நிலையம் | மதிப்பிடப்பட்ட விளைச்சல் (தேங்காய்) | | உள்ளபடியான விளைச்சல் (தேங்காய்) | | மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான விளைச்சல்களுக்கிடையே ய வித்தியாசம் 2015 | | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான விளைச்சல் வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | தேங்காய் | சதவீதம் | தேங்காய் | சதவீதம் |
| பண்டிருப்புவ | 725,000 | 710,000 | 588,206 | 792,279 | (136,794) | (23) | (204,073) | (26) |
| ரத்மலாகார | 650,000 | 665,000 | 616,902 | 676,144 | (33,098) | (5) | (59,242) | (9) |
| அம்பகெலே | 1,300,000 | 1,290,000 | 1,611,559 | 1,424,155 | 311,559 | 19 | 187,404 | 13 |
| பள்ளம | 570,000 | 465,000 | 703,720 | 630,840 | 133,720 | 19 | 72,880 | 12 |
| பொத்துகுளம | 700,000 | 740,000 | 774,367 | 747,838 | 74,357 | 10 | 26,529 | 4 |
| மாக்கந்துர | 475,000 | 490,000 | 336,042 | 428,920 | (138,958) | (41) | (92,878) | (22) |
| வல்பிட | 105,000 | 92,000 | 112,684 | 107,963 | 7,684 | 7 | 4,721 | 4 |
| மாதுருஓயா | 649,399 | 610,000 | 588,869 | 776,226 | (60,530) | (10) | (187,357) | (24) |
| துன்கன்னாவ | 55,215 | 40,500 | 36,356 | 51,248 | (18,859) | (52) | (14,892) | (29) |
| மித்தெனிய | 71,500 | 50,000 | 57,594 | 83,050 | (13,906) | (24) | (25,456) | (31) |
| தப்போவ | 35,000 | - | 30,614 | 31,265 | (4,386) | (14) | (651) | (2) |
| | 5,336,114 | 5,152,500 | 5,456,913 | 5,749,928 | 120,799 | | 200,137 | |

மீளாய்வாண்டில் பண்டிருப்புவ, ரத்மலாகார, மாக்கந்துர, மாதுருஓயா, துன்கன்னாவ, மித்தெனிய, தப்போவ ஆகிய தோட்டங்களது உள்ளபடியான விளைச்சல் மதிப்பிடப்பட்ட விளைச்சலிலும் குறைபடந்தன. அது 5 முதல் 52 சதவீதம் வரையிலான வீச்சில் பரவலடைந்திருந்தது.

**(ஆ) ஏக்கருக்கான விளைச்சலும் மரமொன்றினது வருடாந்தச் சராசரி விளைச்சலும்**

மீளாய்வாண்டில் 04 விளைச்சல் வள நிலையங்கள், 06 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் மாதிரி விவசாயப் பன்னை ஒன்றினது ஏக்கருக்கான தேங்காய் விளைச்சல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| விளைச்சல் வள/ ஆராய்ச்சி நிலையம் | விளைச்சல் பயிர்ச் செய்கை நிலத்தின் அளவு (ஏக்கர்) | விளைச்சல் தரும் மரங்களது எண்ணிக்கை | விழுந்த தேங்காய்கள் (எண்ணிக்கை) | மொத்த வருடாந்த விளைச்சல் (தேங்காய்) | ஒரு மரத்தின் சராசரி வருடாந்த விளைச்சல் (தேங்காய்) | ஏக்கர் விளைச்சல் (தேங்காய்) | விழுந்த தேங்காய்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| பண்டிருப்புவ | 287 | 10,706 | 49,236 | 588,206 | 55 | 2,053 | 8 |
| ரத்மலாகார | 225 | 10,598 | 88,903 | 616,902 | 58 | 2,737 | 14 |
| அம்பகெலே | 329 | 16,917 | 147,289 | 1,611,559 | 95 | 4,906 | 9 |
| பள்ளம | 498 | 14,246 | 401,549 | 703,720 | 49 | 1,413 | 57 |
| பொத்துகுளம | 209 | 9,158 | 183,735 | 774,367 | 85 | 3,705 | 24 |
| மாக்கந்துர | 127 | 4,200 | 38,815 | 336,042 | 80 | 2,646 | 12 |
| வல்பிட | 41 | 1,684 | 62,819 | 112,684 | 67 | 2,750 | 56 |
| மாதுருஓயா | 195 | 7,546 | 175,019 | 588,869 | 78 | 3,012 | 30 |
| துன்கன்னாவ | 23 | 862 | 5,863 | 36,356 | 42 | 1,562 | 16 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மித்தெனிய | 71 | 1,281 | 638 | 57,594 | 45 | 817 | 1 |
| தப்போவ | 5 | 272 | 4,195 | 30,614 | 112 | 6,111 | 14 |
| | -------------- | ------------ | ------------ | ------------ | | | |
| | 2010 | 77,470 | 1,158,061 | 5,456,913 | | | |
| | ====== | ===== | ===== | ===== | | | |

(i) பண்டிருப்புவ, ரத்மலாகார, பள்ளம, துன்கன்னாவ, மித்தெனிய தோட்டங்களின் வருடாந்த சராசரி விளைச்சல் 60 தேங்காய்களுக்கும் குறைவாக இருந்தது.

(ii) ஒரு ஏக்கருக்கான சராசரி தேங்காய் விளைச்சல் ஏறக்குறைய 4,500 தொடக்கம் 5000 வரையாக வேண்டுமாயினும், நிறுவகத்தின் 11 தோட்டங்களில் 09 தோட்டங்களில் ஏக்கர் ஒன்றிற்கான தேங்காய் விளைச்சல் 817 முதல் 3705 வரையிலான வீச்சில் தேங்காய்கள் காணப்பட்டது.

**(இ) ஆராய்ச்சிச் செயற்திட்டங்களது முன்னேற்றத்தைப் பரிசீலித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவு செய்யப்பட வேண்டிய 16 செயற்திட்டங்களில் 08 செயற்திட்டங்களின் செயலாற்றல் 10 முதல் 50 சதவீத வீச்சில் இருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி 2015 ஆம் ஆண்டில் முடிவடையவிருந்த பாம் எண்ணை உற்பத்தியின் சமூக பொருளாதாரத் தாக்க மதிப்பீடு (Socio - Economic Impact Assessment of the Oil Palm Cultivation) மற்றும் மீளாய்வாண்டின்போது ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்ட சேதனக் கமத்தொழில் பயிர்ச் செய்கை முறைகளது பெறுமதியை உயர்த்துவது தொடர்பான பகுப்பாய்வு பல்வேறு மரங்கள் மற்றும் பயிரினங்களது இடைக்காலப் பயிர் மூலம் உற்பத்தியாகும் உயிரியல் கரியின் குணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல் மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையின்போது இடைக்கிடையே பயிரிடப்படும் பயிரினங்களது அபிவிருத்தி அளவுகோலை ஆய்வு செய்தல் போன்ற 03 செயற்திட்டங்கள் 2015 முடிவு வரை ஆரம்பிக்கப்படவில்லை.

## 4.2 நிதியைக் குறைவாகப் பயன்படுத்துதல்

உலக வனப் பயிரிடல் செயற்திட்டத்திற்கு 2014 திசெம்பர் 24 ஆந் திகதியன்று கென்யா எக்ரோ வனவியல் செய்திட்டம் (Kenya Agro Forestry Project) வழங்கிய ரூபா 2,021,532 மீளாய்வாண்டு முடிவிலும் குறித்த செயற்திட்டத்திற்கென உபயோகப்படுத்தப்படாது நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

## 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டிருப்புவ தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள ரூபா 259,000 பெறுமதியான தும்பு உற்பத்தி செய்யும் இயந்திரம் ஓராண்டிற்கு மேலாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்படாதிருந்தது.

(ஆ) சிறட்டைக் கரி உற்பத்தியின்போது வெளியாகும் வாயுவை சுற்றாடலில் கலக்கவிடாது அதனைப் பயன்படுத்தி கொப்பராவை காய வைப்பதற்கான நோக்கத்துடன் ரூபா 1,719,250 செலவில் வாயுப் பாதுகாப்புக் கூறு ஒன்று 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோதும், அது 2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) சிறிய மற்றும் வீட்டுக் கைத்தொழில்களில் ஈடுபடுவோரை முன்னேற்றும் நோக்குடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட ரூபா 161,500 பெறுமதியான கையால் இயக்கப்படும் கயிறு திரிக்கும் 19 இயந்திரங்கள் 2013 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) பூநகரியில் நாற்று தென்னம் பூங்கா ஒன்றை நிறுவும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கிடையே ரூபா 1,197,187 பெறுமதியான பொருட்கள் குறித்த பணியை நிறைவேற்றத் தவறியமையால் ஏறக்குறைய ஓராண்டாக அவை எதுவித பயன்பாடுமின்றி விளைவற்றுக் காணப்பட்டன.

**4.4 பதவியணி நிர்வாகம்**

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 391 ஆகும். உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 276 ஆகும். இதனால் 34 பதவிகளில் 115 வெற்றிடங்கள் நிலவின. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 30 சதவிதமாகும். ஆராய்ச்சி உத்தியோகத்தர், தோட்ட உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் வெற்றிடம் நிலவியதால் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூல நோக்கமாகிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு பாதகமாகத் தாக்கமளித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கும் செயற்பணியும் நிறைவேற்றப்படுவதற்காக 03 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டிணைந் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதும், நிறுவகம் 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான கூட்டிணைந்த திட்டத்தை 2015 திசெம்பர் 31 வரை தயாரித்திருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2015 ஏப்ரல் 07 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபை செயல்நடவடிக்கைத் திட்டத்தை அங்கீகரித்திருந்ததுடன் அச் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சிப் பிரிவு ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பிரிவு என்பன அடைந்திருந்த முன்னேற்ற மட்டத்தைக் கருத்திற் கொண்டு மீண்டும் செயல்நடவடிக்கைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 வருடாந்த அறிக்கையை முன்வைத்தல்**

நிறுவகத்தால் 2013 ஆம் அண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) மனிதவள முகாமைத்துவம் | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய நிறுவகத்தின் வெற்றிடங்களுக்கு குறித்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) தோட்ட முகாமைத்துவம் | தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் புதிய தென்னம் வகைகளை அறிமுகஞ் செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்காமை |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | சகல வாகனங்களும் சொத்துப் பதிவேட்டிலிடப்படாமை, குறித்த கோவைகளைப் பேணாமை, சொத்துக் கைதவிர்ப்பு தொடர்பான தகவல்களைப் பேணாமை |
| (ஈ) உள்ளகக் கட்டுப்பாடு | கொடுப்பனவின்போது செலவு அங்கீகரிக்கப்படுதல், உறுதிப்படுத்துதல், கொடுப்பனவு செய்தல் என்பன பல்வேறு உத்தியோகத்தர்களாலன்றி ஒரேயொரு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டமை புலனாகியது. |